செய்தி வெளியீடு எண் : 168 நாள் 24.03.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப.. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

~~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.03.2017) நடைபெற்றது.

முன்னதாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் (பயிர் மரபியல்) திரு மணிமாறன் அவர்கள் நெல் மற்றும் பயறுவகைப் பயிர்களில் வறட்சி மேலாண்மை முறைகள் குறித்தும் அசோலோ உற்பத்திக் குறித்தும் விளக்கினார். அதற்குண்டான துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

வறட்சியால் தென்னை மரம் காயாமல் மண்ணின் நீர்வளம் பாதுகாக்க தென்னை நார்த் தோகை மற்றும் மட்டைகளை மரத்தடியில் இட்டு செய்முறை செய்து காண்பிக்கப்பட்டது. கால்நடைத் தீவனம் தடையின்றி கிடைக்க 8 டெப்பொ துவங்கப்பட்டுள்ளதாகவும். ஒரு கிலோ ரூ.2-க்கு விற்கப்படுவதாகவும் மேலும் கால்நடையின் பால்வளம் பெருக்குவதற்குத் தேவையான அசோலா விதைகள் கிடைப்பதாகவும் தெரிவித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பயறு வகை பயிர்கள் சாகுபடியினை ஊக்குவிக்கும் வகையில் சிறு குறு விவசாயிகளுக்கு ரூபாய் 31600 மதிப்புள்ள மழைத்தூவுவான் மற்றும் ரூபாய் 19600 மதிப்புள்ள நீர்த்தூவுவான் முழு மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கினார்.

மாவட்ட ஆட்சியர் தனது உரையில், திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரை சொர்ணவாரி பருவத்தில் நெற் பயிரில் 26525 ஹெக்டெரும், சம்பா பருவத்தில் 51026 ஹெக்டெரும். நவரை பருவத்தில் 18728 ஹெக்டெரும், சொர்ணவாரி பருவத்தில் திருந்திய நெற்பயிரில் 19064 ஹெக்டெரும். சம்பா பருவத்தில் திருந்திய நெல் பயிர் 36423 ஹெக்டெரும். நவரை பருவத்தில் 12434 ஹெக்டெரும், கரும்பு நடவில் 1237 ஹெக்டெரும், கரும்பு மறுதாம்பில் 5227 ஹெக்டெரும். பயறுவகை பயிர்களில் 12279 ஹெக்டெரும், எண்ணைய்வித்துக்கள் 7111 ஹெக்டெரும் சிறு தானியங்கள் 1134 ஹெக்டெரும், பயிரிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பு மாதம் முடிய நிகர பயிர் சாகுபடி பரப்பு 105074 ஹெக்டெர் ஆகும். இவற்றில் வர்தா புயல் காரணமாக 32240.9211 எக்டேர் பரப்பளவில் பாதிப்படைந்த நெற்பயிர்களுக்கு நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் 6114.8 எக்டேர் பரப்பளவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 11195 விவசாயிகளில் இதுவரை 10697 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் மின்னனு பணப்பரிவர்த்தனை ECS மூலம் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 2016-17 ஆம் ஆண்டில் ரூ.2,72,17,453 பிரிமியத்தொகை ICICI Lombard நிறுவனத்திடம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த பயிர் காப்பீடு திட்டத்தில் 31367 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். இது சம்மந்தமாக வர்தா புயல் மற்றும் வறட்சி போன்ற இயற்கை இடர்பாடு காரணத்தினால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புதிதாக பணியமர்த்தப்பட்டுள்ள ஒப்பந்த பணியாளர்கள் மற்றும் அரசு பணியாளர்கள் மூலம் பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொண்டு மகசூல் கணிப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் அனைத்து அறுவடை மகசூல் விவரங்கள் பெறப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட காப்பீடு நிறுவனத்திற்கு அனுப்பி உரிய இழப்பீடு விவசாயிகளுக்கு வழங்க மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வர்தா புயலால் பாதிக்கப்பட்ட சவுக்கு மரங்களுக்கு அரசு விதிமுறைகளின்படி நிவாரணம் வழங்க இயலாது என தெரிவித்தார். மாவட்டத்தில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக பாசன நீர் பற்றாக்குறை உள்ள கிராமங்களில் நெற்பயிறுக்கு பதிலாக பயறு வகை பயிர்களை சாகுபடி செய்ய பரிந்துரை செய்யப்பட்டு சிறப்பு சலுகை தொகுப்பு மானியமாக -1 ஏக்கருக்கு ரூபாய் 2000 வீதம் விதை உட்பட வேளாண் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது மற்றும் பாசன நீர் சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெற சொட்டு நீர் பாசனம், மழை தூவான் ஆகியவற்றை விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்தார். இந்த மானியம் பெற சிறு குறு விவசாயிகளுக்கான சான்று கால தாமதமின்றி வழங்க அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.
~~~~~

.விவசாயிகள் விவசாய பயன்பாட்டிற்காக ஏரிகளில் இருந்து வண்டல் மண் எடுப்பதற்கு 53 ஏரிகள் அங்கீகரிக்கப்பட்டு அரசிதழில் வெளியிட்டிருப்பதாகவும், விவசாயிகள் 5 லோடு வரை வண்டல் மண் எடுத்துக் கொள்ளலாம் எனவும். அதற்கு உதவி இயக்குநர்(கனிமவளம்) அவர்களிடம் உரிய விண்ணப்பித்து விவசாயிகள் பயன்பெறலாம் எனவும் தெரிவித்தார். இப்பட்டியலில் சேர்க்கப்படாத ஏரிகள் இருப்பின் பொதுப்பணித் துறை ஏரிகளை சேர்க்கவும் பின்னர் அரசிதழ் வெளியிடப்படும் எனவும் தெரிவித்தார்.

. நீர் ஆதார நிலைகளை பாதுகாக்க குடிமராமத்து திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள 2016-17-ம் நிதியாண்டிற்கு ரூபாய 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் இவ்வாண்டில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் 46 ஏரிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும் இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட ஏரிகளில் பணிகள் மேற்கொள்ள விவசாயிகளின் பங்களிப்பாக 10% வழங்கவேண்டும், இப்பங்களிப்பு பணம், பொருள் அல்லது உடல் உழைப்பாகவோ அளிக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டது. இதற்கு விவசாயிகள் சேர்ந்து குழு அமைத்து பதிவு செய்து பொதுப்பணித்துறை மூலம் விண்ணப்பித்து விவசாயிகள் பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார். சிறு, குறு விவசாயிகளுக்கான சான்று கால தாமதமின்றி வழங்க அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விவசாயிகளின் புகார் குறித்தான விவரங்களை தெரிவிக்க 1077, தொலைபேசி எண், வாட்ஸ் அப் எண். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட எண்களில் விவசாயிகள் தொடர்பு கொண்டு எந்தவித புகார்களையும் தெரிவிக்கலாம் என தெரிவித்தார்.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் செலுத்தப்படும் பிரீமியத் தொகைக்கு இரசீது வழங்கவும், வர்தா புயல் நிவாரணத் தொகை வழங்கியதில் நடைபெற்ற முறைகேடுகள் மீது விசாரணை செய்யவும், கரும்பு தொகையினை உயர்த்தி தரவும், மேய்க்கால் புறம்போக்கு, அரசு புறம்போக்கு மற்றும் நீர் நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றவும் பொதுப்பணிப்பணித்துறையின் மூலம் பழுதடைந்த மதகுகள் மற்றும் பாசன கால்வாய்களை சீர் அமைக்கவும் கேட்டுக்கொண்டனர்.

மேலும் பொன்னேரி பகுதிகளில் அனுமதி இன்றி செயல்படும் வண்ண மீன் மற்றும் இறால் பண்ணைகளை அகற்றவும், கொசஸ்தலையாற்றில் நடைபெறும் மணல் கொள்ளையை தடுக்கவும், மயான பாதை ஆக்கிரமிப்புகளை அகற்றவும், செம்பேடு மற்றும் திருக்கண்டலம் செக் டேம் சீர்செய்தல், தாமரைப்பாக்கத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைத்தல், அனுமதியல்லாமல் சாலையில் கூட்டம் போட்டு போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்துவதை தடுக்கவும், வெள்ளியூர் தடுப்பணையை சீர் செய்தல் சீமை கருவேல மரங்களை அகற்றுதல், கால்நடைகளுக்கான பட்டி கட்டுதல், உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்தனர்.

பின்னர் கடந்த மாதத்தில் பெறப்பட்ட விவசாயிகளுடைய கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டு விவசாயிகளிடமிருந்து மனுக்களை மாவட்ட ஆட்சியர் பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் திரு முருகவேல், மாவட்ட ஆட்.சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு சுரேஷ் ஜோ குமார் பிரைட், பொன்னேரி சார் ஆட்சியர் திரு வி.பி.தண்டபாணி, வருவாய் கோட்ட அலுவலர்கள் திருமதி திவ்யஸ்ரீ (திருவள்ளூர்), திரு விமல்ராஜ் (திருத்தணி), திரு. பெ.அரவிந்தன் (அம்பத்தூர்), அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்**